அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## தமிழகத்தின் 3500 ஆண்டுகள் தொன்மையான எஃகு வாள்

கட்டுரை உள்ளே



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:1 Issue : 4 October 2019* கோட்டை :1 வாயில்:4 அக்டோபர் 2019

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணவழகன்
முனைவர் கு.சிதம்பரம்
முனைவர் வாணிஅறிவாளன்
முனைவர் டி.ஆதித்தன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஶ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஹெப்சி ரோஸ்மேரி
முனைவர் சு.முத்துலட்சுமி
முனைவர் சாமி திருமாவளவன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் கி.ஐயப்பன்
முனைவர் வே.வே. மீனாட்சி
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் *K.*முத்துராமன்
பேரா. முனைவர் சு.இராசவேலு
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V.*வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் எஸ்.சந்திரசேகரன்
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் பகவதி சுந்தரம் சிவமாருதி



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
## இதழாக்கம்

**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் **(Peer Review)**பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


**தமிழகத்தின் 3500 ஆண்டுகள் தொன்மையான எஃகு வாள் - ஓர் அறிவியல் பார்வை**
**முனைவர். இரா. ரமேஷ்**

**Women Liberation: Reflections of Indian Press on Women in Dravidian and Leftist Movements in Tamilnadu, 1928-1947**
**Dr.V.Venkatraman, Ph.D., D.Litt.,**

குதிரைக்கல் இட்டேரி நடுகல்
முனைவர். போ.கந்தசாமி

**வாணியம்பாடி அதிதீஸ்வரர் திருக்கோயில் கல்வெட்டுகள் - ஓர் ஆய்வு**
முனைவர் மு.முஜிபுர்ரகுமான

**வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென**
**முனைவர் மு.ஜெகதீசன்**

**குறிஞ்சிப் பாட்டில் தோழியின் சொல்வன்மை**
**முனைவர்ப. விமலா அண்ணாதுரை**

**பேச்சு வழக்கில் தொடரும் இலக்கணமரபுகள்**
**முனைவர்சு. விமல்ராஜ்**

**இலக்கியத்தில் சூழலியல் பதிவுகள்**
**முனைவர். சு. பேச்சியம்மாள்**

**மனைவி முகத்தில் எழுதி காதலிக்கு அனுப்பிய காதல் தூது - பெருங்கதை ஓர் ஆய்வு**
**முனைவர் க.லெனின்**

**கம்பனின் இறைமனிதன்**
**முனைவர் ல.குமாரி கிருஷ்ணவேணி**

# அகத்தினுள்


ஐவர் அம்மானையில் சமுதாயம்
முனைவர் ம.ஷீலா ஸ்ரீநிவாசன்

நடப்பியல் நோக்கில் ஆசராக்கோவை
முனைவர் **கோ. வெங்கடகிருஷ்ணன்**

அற நூல்களின் தோற்றப் பின்னணி
**முனைவர். மா.லெமூரியா**

தமிழ்ச் சமயமரபில் பக்திநெறி
**முனைவர் ர.சுரேஷ்**

மொழிப்பயன்பாட்டில் திறன்மேம்பாடு
முனைவர் வெ. விஜயலட்சுமி

கறுப்பு வயிறுகளும், வெள்ளை உணவுகளும்
**முனைவர்.** ப.ம.மயிலா

தமிழ்த் திரைப்படங்களில் திருநங்கையர் சித்தரிப்பு
**முனைவர்கி. அய்யப்பன்**

உழவுமாடுகள் சிறுகதைத் தொகுப்பில்பெண்களின் பிரச்சனைகள்
முனைவர் த.அமுதா

ஆத்துக்குப் போகனும் நாவலில் பெண்களின் சிக்கல்
முனைவர் பெ.கி.கோவிந்தராஜ்

பௌர்ணமியின் சிறப்பு
*முனைவர் கல்பனாதேவி*


முகப்பு

**தெலுங்கனூர் - புகைப்படம்**

**முனைவர் ரமேஷ்**

# தமிழ்

# குறிஞ்சிப்பாட்டில் தோழியின் சொல்வன்மை

**முனைவர்ப.விமலாஅண்ணாதுரை,**
**உதவிப்பேராசிரியர் (ம)தலைவர்.**
**செல்லம்மாள்மகளிர்கல்லூரி,**
**கிண்டி ,சென்னை - 32**

**ஆய்வுச்சுருக்கம்;**

பண்டையஅகத்திணைப்பாடல்களில்தோழியின்தன்னிகரற்றசொல்வன்மைமிகுந்துநிற்றலை அதிகம்காணலாம். அவளன்றிஅகத்திணைப்பாடல்கள்முழுப்பெறமுடியாதுஎன்றேகூறவேண்டும். இக்கூற்றுஐவகைநிலத்தின்கண்ணும்நமக்குதெரிகிறதுஐவகைநிலத்தில்காணப்பெறும்அன்புவாழ்க்கையில்தோழிமுழுமையாகஊடுருவிநிற்பதைக்காண்கிறோம்.அதனைகபிலரின்குறிஞ்சிப்பாட்டின்வழிஆராய்வதேஇக்கட்டுரை.

**திறவுச்சொற்கள்;**

குறிஞ்சிப்பாட்டு, கபிலர்தோழி, சங்கஇலக்கியம், அகத்திணை, அறத்தோடுநிற்றல்.

**குறிஞ்சிப்பாட்டில்தோழியின்சொல்வன்மை**

அகஇலக்கியத்தில்இன்றியமையாதஇடத்தினைப்பெறுபவள்தோழி. அகத்திணைமாந்தர்களுள்தோழிக்கெனத்தனிச்சிறப்பிடம்உண்டு.களவு, கற்புஇருநிலைகளிலும்பெரும்பங்குஏற்பவள்தோழி. தலைவியின்குழந்தைப்பருவத்தில்உடலைபோற்றிவளர்ப்பவள்செவிலி.இளமைப்பருவத்தில்உள்ளத்தைபோற்றிகாப்பவள்தோழி. தோழியரேபின்னால்செவிலியர்என்றநிலையைஅடைகின்றனர். தலைவியின்விளையாட்டுப்பருவத்தில்இருந்துதோழியாகஇருந்து.,மகப்பேறுநிலையில்செவிலியாக மாறுகின்றாள். செவிலியின்மகள்தான்தோழிஎன்பதை.

**“தோழிதானேசெவிலிமகளே” (தொல்பொருள் — 127)**

எனவும்.,

**‘சூழ்தலும்உசாத்துணைநிலைமையிற்பொலிமே”**
**(தொல் -பொருள் 128)**

என்றும்கூறியுள்ளார்தொல்காப்பியர்..பிறமொழிஇலக்கியங்களைவிடதமிழ்மொழியில்தான்தலைவியுடன்தோழிசமநிலையில்சுட்டப்படுகிறாள்.இகுளை.பாங்கி.சில்லடி.இணங்கி.துணைவி.தோழி.செடிபோன்றசொற்கள்தோழியைக்குறிப்பன.ஆனால்தோழிஎன்றசொல்லேபழமைசிறப்புடையதுதொல்காப்பியம்,இறையனார்அகப்பொருள்,.வீரசோழியம்முதலியஇலக்கணநூல்களிலும்சங்கஇலக்கியங்களிலும்தோழிஎன்றசொல்லேபயன்பாட்டில்உள்ளது.

**தோழிபற்றிஅறிஞர்கள்கூற்று;**

1. 'அறிவுசார்ந்தஅக்காலப்பெண்ணுலகிற்குஎடுத்துக்காட்டாகத்திகழ்கின்றவள்தோழி' என்கிறார்**புலவர்குழந்தை**

2. 'தோழியானவள்அன்பும். அறிவும். அறமும்முறையேஉள்ளம்உரைசெயல்களாகத்திறண்டுபெண்ணுருக்கொண்டுவந்தாள்போலும்பெருமையுடையவள்என்றால்சாலும்' என்பர்**அவ்வைசுதுரைசாமிபிள்ளை**
3. 'தலைவன்தலைவிஎன்னுமீருவர்கூற்றிலும்இவ்விருவர்அன்பினையும்வளர்க்கும்நன்மதிநாட்டம்அமைந்ததோழியின்கூற்றேஇக்களவொழுக்கத்தின்இயல்பினைஇனிதுவிளக்குவதாகும்' என்கிறார்**வெள்ளைவாரணனார்**
4. 'தோழிஇன்றிகாதலர்களின்களவுஒழுக்கம்நீளாதுஎன்பதும்ஐந்திணைஇலக்கியப்படைப்புக்குதோழிஎன்னும்ஆள்இன்றியமையாதவள்என்பதும்தோழியின்புணர்ச்சிக்குரியதுறைகளேபுலவர்களின்நெஞ்சைக்கவர்ந்தனஎன்பதும்பெறலாம்'என்கிறார்**வ சுபமாணிக்கம்**
5. 'அரியநட்புடையவராய்அன்னையாய்அமைச்சராய்விளங்கும்தோழிதலைவியின்வாழ்வுவளம்பெறச்செய்யும்சேவைபெரிதுபெரிது'''என்கிறார்**நா.ஜெயராமன்.**

**தோழியின்சிறப்பு;**

சங்ககப்பாடல்களில்தலைவன்.தலைவிஆகியபாட்டுடைத்தலைமக்கள்இருந்தும்அவர்களின்செயல்பாட்டுக்குஉறுதுணையாய்விளங்கும்தோழியின்நிலையும்.பணியும்அதிகஅளவில்நமதுகருத்தைசெலுத்தச்செய்கின்றன.
தோழிஎனும்பாத்திரத்தின்பங்குபயிலும்பாடல்களில்எல்லாம்பரவிநிற்கிறது.இடைக்காலத்தமிழ்இலக்கியத்தில்தோன்றிவளர்ந்ததூதுஇலக்கியங்களுக்குச்சங்கஇலக்கியத்தில்பலமுன்னோடிசான்றுகளைக்காணமுடிகிறதுசங்கஇலக்கியத்தின்அகப்பாடல்இயக்கத்திற்குமுக்கியபங்காற்றும்தோழியும்பாங்கனும்ஒருவகைதூதுவர்களாகவேவிளங்கினார்என்றால்மிகையாகாது.

தொல்காப்பியத்திலும்சங்கசான்றோர்தம்இலக்கியப்படைப்புகளிலும்குறிப்பிடப்படும்தோழி— அறிவு-அழகுஆற்றல்முதலியவற்றால்தலைமகளோடுஒத்தசிறப்புடையவளாகதலைவிக்குஉற்றுழிஉதவும்நட்பினளாகவிளங்குகின்றாள்.அவளுடையச்சிறப்பினை**'தாங்கரும்சிறப்பின்தோழி'**எனவும்**'உறுகண்ஓம்பல்தன்னியல்பாகலின்,உரியதாகும்தோழிகண்உரனே'**எனவும்ஆசிரியர்தொல்காப்பியனார்கூறிச்சென்றுள்ளார்,

பண்டையஅகத்திணைப்பாடல்களில்தோழியின்தன்னிகரற்றசொல்வன்மைமிகுந்துநிற்றலைஅதிகம்காணலாம்.அவளன்றிஅகத்திணைப்பாடல்கள்முழுப்பெறமுடியாதுஎன்றேகூறவேண்டும்.இக்கூற்றுஐவகைநிலத்தின்கண்ணும்நமக்குதெரிகிறதுஐவகைநிலத்தில்காணப்பெறும்அன்புவாழ்க்கையில்தோழிமுழுமையாகஊடுருவிநிற்பதைக்காண்கிறோம்.

களவுக்காலத்தில்தோழியின்உதவியோடுதலைமக்கள்சந்தித்தலும்.,தலைமகனுக்குத்திருமணத்தின்இன்றியமையாமையைஎடுத்துஉரைத்தலும்,செவிலிதலைவியின்உடல்மெலிவுகண்டுவருத்தமுறும்காலத்திலும,அறத்தொடுநிற்கும்சமயத்திலும்,இவற்றைபோன்றஇதரபலஇடங்களிலும்தோழியின்அறிவாற்றலும்சொல்வன்மையும்வெளிப்படுவதைநாம்நன்குஉணரலாம்.

தமிழ்இலக்கியபெருங்கடலில்சங்ககாலப்பாடல்களில்ஒருபகுதிஆயினும்அச்சிறுபகுதியினும் நீந்திக்கரைசேர்வதுஎளிதன்றுஎனவேபத்துப்பாட்டில்ஒருபகுதியாகவிளங்கும்குறிஞ்சிப்பாட்டினைத் துணைகொண்டுதோழியின்மாண்பினைஉணர்வோம்.

ஆரியஅரசர்பிரகத்தத்தனுக்குஅறத்தொடுநிற்றலின்சிறப்பினைஉணர்த்தவும்,,தமிழ்மொழியின்தனியிலக்கியமாண்பினைகாட்டவும்சங்கச்சான்றோர்கபிலர்261 அடியில்குறிஞசிப்பாட்டைஇயற்றினார்.அறத்தொடுநிற்றலின்சிறப்பினைகபிலர்தோழிகதாபாத்திரத்தின்மூலம்நமக்குவிளக்குகிறார்.

**அறத்தொடுநிற்றல்**

தலைவியின்உடல்மெலிவுகண்டுவருந்தும்செவிலிக்குஆறுதல்கூறும்வகையுடன்உண்மைநிலையையும்உணர்த்தமுற்படுகிறாள்தோழி.இதனைஇலக்கியச்சான்றோர்அறத்தொடுநிற்றல்எனக்குறிப்பிடுகின்றனர்.ஆனால்தோழிதானேவலியசென்றுஅறத்தொடுநிற்பதாகஇங்குக்காட்டப்படவில்லை. இக்கருத்துஎல்லாபாடல்களுக்கும்பொதுப்படையாகவிளங்குகிறதுஎனக்கூறலாம்.அறத்தொடுநிற்றல் என்றமரபினைகூறும்தொல்காப்பியனார்,

**'அறத்தொடுநிற்குங்காலத்தன்றி**
**அரசியல்மரபிலள்தோழிஎன்ப'(பொருளியல்)**

எனக்கூறியுள்ளார்.இவ்வாறுதோழிஅறத்தொடுநிற்கும்காலத்தில்தலைவியின்குடிப்பிறப்பும்கற்புமுதலியவற்றிற்கும்,செவிலியின்அறிவிற்கும்.,தலைவனின்பெருமைக்கும்,தன்பாதுகாவலுக்கும்,மாறுபடாதசொற்கள்நிறைந்தபேச்சுத்திறமையினால்,செவிலிக்குஉண்மையைஉணர்த்துகிறாள்.

அறத்தொடுநிற்கும்தோழி,செவிலிக்குத்தான்கூறவிரும்புவதைபலநிலைகளில்இருந்துஉணர்த்துகிறாள்.அந்நிலைகளைஏழுவகையாகப்கொண்டுவிளக்கும்தொல்காப்பியச்சூத்திரம்ஒன்றுபின்வருமாறுகூறுகிறது.

**''எளித்தல்ஏத்தல்வேட்கையுரைத்தல்**
**கூறுதல்உசாதல்ஏதீடுதொகைஇய**
**ஏழுவகைஎன்மனார்புலவர்' (பொருளியல்)**

இந்தஏழுதிறத்தினுள்'**கூறுதல்உசாஅதல**'என்றுஒழியஇதரஆறுவகையாலும்தோழிஅறத்தொடுநிற்பதாககுறிஞ்சிப்பாட்டில்கூறப்பட்டுள்ளது.

தலைவியின்உடல்மெலிவுக்குக்களவுவாழ்க்கையேகாரணம்என்றுஉணராமல்வருந்தும்செவிலியை'**அன்னாய்வாழிவேண்டுஅன்னை**'எனத்தோழிஅழைக்கின்றாள்.ஏதேனும்ஒருநினைவில்அழுந்திஇருப்பவர்களைதம்அசால்லைஏற்றுக்கொள்ளும்படிமுன்னிலைப்படுத்தும்பொழுதுஒருமுறைக்குஇருமுறைஅழைக்கும்வழக்கம்சொல்வன்மையுடன்உரையாடுபவர்களுக்குஅமைந்தஇயல்பாகும். இந்தஇயல்பைதோழிஎடுத்தஎடுப்பிலேயேகையாளத்தொடங்குகிறாள்.மேலும்செவிலிக்குமுன்னமேயேதெரிவித்திருக்கவேண்டியஇம்மறைவுவாழ்க்கையினைஇந்நாள்வரையும்அவள்அறியாதபடிமறைத்தமைக்குகாரணம்கூறவேண்டும்என்பதற்கும்தம்உயிரினும்சிறந்தநாணமேஇச்செய்தியினைவெளிக்கொணராதபடிதடைப்படுத்திநின்றதுஎன்பதையும்கூறவேண்டும்.இதனைக்கருத்தில்கொண்டதோழி, செவிலியைஇருமுறைஅழைத்தாள்.அன்னாய்எனவிளித்ததோழி,தாயின்கருத்தைதன்பால்முழுமையாகதிருப்புதற்பொருட்டுவாழிஎனவாழ்த்துகிறார்வேண்டுஎனும்சொல்யான்கூறப்போகும்செய்தி., உன்நோய்க்கும்தலைவியின்வருத்ததிருக்கும்கழுவாயாகஅமையும்அதனைவிரும்பிக்கேள்என்னும் பொருளைமுன்நிறுத்துகிறது.

துன்புற்றுஉழலும்செவிலியின்மனநிலையுடன்தன்னைஇணைத்துக்கொள்ளத்தோழிமுயற்சிக்கிறாள்.இதனால்அவள்அடைந்ததுயரத்தில்தானும்ஈடுபட்டுஉள்ளம்வருந்துகிறாள்

**'அன்னாய்வாழி! வேண்டுஅன்னை! ஒண்ணுதல்**
**ஒலிமென்கூந்தல்என்தோழிமேனி**
**விறல்இழைநெகிழ்த்தவீவுஅரும்கடுநோய்**

**அகலுள்ஆங்கண்அறியுநர்வினாயும்,**
**பரவியும்தொழுதும்விரவுமலர்தூயும்,**
**வேறுபல்உருவில்கடவுள்பேணி,**
**நறையும்விரையும்ஓச்சியும்அலவுற்று,**
**எய்யாமையலைநீயும்வருந்துதி! (குறிஞ்சிப்பாட்டு;1-8)**

என்னும்தொடர்களினால்செவிலித்தாயின்வருத்தத்தினைதானும்உணர்ந்துவருந்துவதாகதோழிகூறுகின்றாள்.இதனால்செவிலித்தாய்உள்ளத்தில்மற்றொருமாற்றத்தையும்தோழிஏற்படுத்துகிறாள்.அறியுநர்என்றதுஇகழ்ச்சிக்குறிப்பையேவெளிக்கொணருகிறது.தன்தலைவியின்நோய்க்குகாரணம்தலைவன்மார்பேயாகவும்.,அதனைஅறியாமல்தெய்வத்தால்வந்ததுஎன்பர்மடவோர்என்பதுதோழியின்கருத்தாகதென்படுகிறது,தோழிஇவ்வாறுகுறிப்பிடுவதுசெவிலிக்குசற்றுமனக்குறையைஉண்டுபண்ணிஇருப்பினும்அதுதோழியின்கூற்றினைகூர்ந்துகேட்கஅவளைத்தூண்டுகிறது.

செவிலித்தாய்மனவாட்டம்கொள்வதற்குகாரணமானதலைவியின்நோய்.,அவள்மனத்துள்வாழும்கவலையால்ஏற்பட்டதுஎன்றுகூறநினைத்ததோழி.,

**‘நல்கவின்தொலையவும், நறும்தோள்நெகிழவும்,**
**புள்பிறர்அறியவும்புலம்புவந்துஅலைப்பவும்,**
**உள்கரந்துஉறையும்உய்யாஅரும்படர்**
**செப்பல்வன்மையின்செறித்தியான்கடவலின்’**
**(குறிஞ்சிப்பாட்டு;9-12)**

எனக்கூறிச்செவிலியின்கருத்தினைத்தன்பால்ஈர்த்துக்கொள்ளமுயற்சிக்கிறாள்.இக்கூற்றினால்**‘புறஞ்செயசிதைதல்’**.,**‘புலம்பித்தோன்றல்’**எனும்இரண்டுமெய்ப்பாடுகளைத்தலைவிஎய்தினாள்என்பதைசெவிலிக்குஉணர்த்தினாள்.தலைவிதானுற்றநோயைதாய்,தமர்அறியாவண்ணம்மறைக்கும்பொருட்டுதான்எப்பொழுதும்போலஅழகியத்தோற்றத்துடன்வெளியே(பொய்)க்கோலம்புனைந்தாலும்.,அவள்அகத்தேநின்றவருத்தம்அவளுடையநலத்தைசிதைத்தேகாட்டியது.இந்நிலையில்அவள்தன்தாய்முதலியசுற்றம்சூழஇருந்தும்.,தனித்திருப்பதாகஉணர்ந்தாள்.அத்தனிமைஉணர்ச்சியையேதோழி**‘புலம்புவந்தலைப்பவும்’**என்றுகுறிப்பிட்டுக்காட்டுகின்றாள்.தலைவிதனதுசெறிவுடைமையால்தன்நோயைத்தன்னகத்தேமறைத்தொழுகியதால்.,தோழிதன்சொல்வன்மையால்அவளைமாற்றிஅவளேகூறுமாறுசெய்தேன்என்றுகூறுகிறாள்.ஆனால்தலைவியின்களவுஒழுக்கத்தைஉடனேகூறாமல்அவளுடையமனவருத்தத்தைமேலும்கூறிச்செவிலியின்உள்ளத்தையும்உருகசெய்கிறாள்.இதனை.,

**‘முத்தினும், மணியினும், பொன்னினும், அத்துணை**
**நேர்வருங்குரையகலங்கெடின்புணரும்**
**சால்பும்வியப்பும்இயல்பும்குன்றின்**
**மாசறக்கழீஇவயங்குபுகழ்நிறுத்தல்,**
**ஆசறுகாட்சிஐயர்க்கும்அந்நிலை**
**எளியஎன்னார்தொல்மருங்குஅறிஞர்’’**
**(குறிஞ்சிப்பாட்டு;13 -18)**

என்றுஒழுக்கத்தின்இழுக்காஉயர்குணச்சிறப்பையும்..

**மாதரும்மடனும்ஓராங்குத்தணப்ப,**
**நெடுந்தேர்எந்தைஅருங்கடிநீவி,**
**இருவேம்ஆய்ந்தமன்றல்இதுவென**
**நாம்அறிஉறாலின்பழியும்உண்டோ?**
**ஆற்றின்வாரார்ஆயினும்ஆற்ற**
**ஏனைஉலகத்தும்இயைவதால், நமக்கென.**

(**குறிஞ்சிப்பாட்டு;**19-24)

என்றுமனக்கவலையையும்உள்ளத்திண்மையையும்தோழிஒருவாறுவெளியிடுகிறாள்.இவ்வடிகளில் .தலைவியின்குடிப்பிறப்புக்குகுற்றம்ஏற்படாதவண்ணம்உரைக்கின்றாள்.

**தன்னிலைகூறும்தோழி ;**

தோழிஇந்தஉண்மையைகாலந்தாழ்த்திவெளியிடுவதற்குச்செவிலிழசீற்றம்கொள்ளுவாளோ என்றஅச்சத்தினால் .தன்னுடையசொல்வன்மையின்திறத்தினைஉடனேகையாள்கிறாள். இதனை.,

**‘இகல்மீக்கடவும்இருபெருவேந்தர்**
**வினைஇடைநின்றசான்றோர்போல,**
**இருபேர்அச்சமோடியானும்ஆற்றலேன்.’**

(**குறிஞ்சிப்பாட்டு;**27-29)

எனத்தன்நிலையைதாய்க்குபுலப்படுத்துகிறாள்.செவிலிக்குதலைவியின்களவினைஎடுத்துரைத்த தோழி.,தொடர்ந்துகளவுஏற்பட்டமுறையினையும்.,அதுவளர்ந்தவகையினையும்விளக்கிசெல்கிறாள் .

அறத்தொடுநிற்கும்தோழி,தலைவியின்கற்புமுதலானகுணநலன்களுக்குஇழுக்குநேராவண்ணம்பலசெய்திகளைகூறுகிறாள்.தலைவிதலைவனைகண்டதுசூழ்வினைகாரணத்தினாலேயேஎன்பதைமதம்பிடித்தயானையைகொண்டுவிளங்குகின்றாள்.அதனிடமிருந்துஉயிர்பிழைத்தற்குரியவேறுவழியின்றி.,செய்வதறியாதுதம்உயிரினும்சிறந்தநாணையும்மறந்து.,தம்முன்நின்றதலைவனையேபாதுகாவலாகசார்ந்தோம்என்கிறாள்.

**‘மையல்வேழம்மடங்கலின்எதிர்தர,**
**உய்வுஇடம்அறியேம்ஆகி, ஒய்யெனத்**
**திருந்துகோல்எல்வளைதெழிப்ப, நாணுமறந்து,**
**விதுப்புறுமனத்தேம்விரைந்துஅவற்பொருந்திச்**
**சூர்உறுமஞ்ஞையின்நடுங்க,’**

(**குறிஞ்சிப்பாட்டு;**165-169)

என்றுதலைவியின்நாணத்தைக்கூறுகிறாள்.

தலைமகள்தன்உயிரினும்மேலானநாணத்தையும்அதனினும்சிறந்தகற்பினையும்பாதுகாப்பும் இயல்புடையவள்என்பதனை‘ஆற்றினவாராராயினும்ஆற்றஏனைஉலகத்தும்இயைவதால்நமக்கு’எனவரும்தலைவியின்வாய்மொழியால்அறிவுறுத்துகிறாள்,

தகைசான்றதலைவனின்பெருமையையும்தலைவிஅவனைபெறுதலால்அமையும்உவகையும்பலஇடங்களில்சுட்டிக்காட்டுகிறாள்.தலைவியைமணந்துகொள்ளத்தக்கஒத்தஅன்பும்பிறதகுதியும் உடையவன்இவனேஎன்பதைக்.,

**“குன்றுகெழுநாடன்எம்விழைதருபெருவிறல்’**

என்னும்அடியில்குறிப்பிடுகிறாள்.களிறுகண்டுநடுங்கும்தலைவிக்கு**‘அஞ்சல்ஓம்பு’**எனஆறுதல்கூறவேஅவளைஅணைத்தான்என்றும்..,பெண்கள்பால்பெறும்இன்பமேகுறிக்கோள்எனக்கொள்ளாதுஇல்லறமேநல்லறம்எனக்கூறும்தலைவனின்உயர்வையும்.,

**‘பெறாஅன்பெயரினும், முனியல்உறாஅன்,**
**இளமையின்இகந்தன்றும்இலனே, வளமையின்**
**தன்நிலைதீர்ந்தன்றும்இலனே;’**

(**குறிஞ்சிப்பாட்டு**;237-245)
என்றுதலைவனின்ஒழுக்கச்சிறப்பையும்,,

**"நேர்இறைமுன்கைபற்றிநுமர்தர,**
**நாடுஅறிநன்மணம்அயர்கம்சில்நாள்!**
**கலங்கல்ஓம்புமின், இலங்குஇழையீர்!"என,**

**(குறிஞ்சிப்பாட்டு;231-233)**

அவ்வொழுக்கத்தைப்பிறருக்குஉணர்த்தும்தலைவனின்அறிவுடைமையினையும்தோழிதன்சொல்வன்மையினால்எடுத்தியம்புகிறாள்.

**தலைவன்நாட்டின்சிறப்பு:**

தலைவனின்உருவத்தைமுனைந்துபாடி.,அவனைஉயர்ந்தவனாககாட்டுகிறாள், தலைவனின்மலையைவருணித்துஅவனுடையநாட்டின்செல்வச்சிறப்பைச்செவிலிக்குஎடுத்துரைக்கிறாள்.

**'———- ——— அவ்வழி**
**பழுமிளகுஉக்கபாறைநெடுஞ்சுனை**
**முழுமுதற்கொக்கின்தீங்கனிஉதிர்ந்தெனப்,**
**புள்எறிபிரசமொடுஈண்டிபலவின்**
**நெகிழ்ந்துஉகுநறும்பழம்விளைந்ததேறல்**

**நீர்செத்துஅயின்றதோகைவியல்ஊர்ச்**
**சாறுகொள்ஆங்கண்விழவுக்களம்நந்தி,**
**அரிக்கூட்டுஇன்னியம்கறங்கஆடுமகள்**
**கயிறுஊர்பாணியின்தளரும்சாரல்**
**வரையரமகளிரின்சாஅய்விழைதக,**

**விண்பொரும்சென்னிக்கிளைஇயகாந்தள்**
**தண்கமழ்அலரிதாஅய்நன்பல**
**வம்புவிரிகளத்தின்கவின்பெறப்பொலிந்த**
**குன்றுகெழுநாடன் (குறிஞ்சிப்பாட்டு;186-199)**

என்னும்பகுதிதலைவனதுமலையின்இயல்பினைப்புனைந்துரைப்பதோடு..,செவிலியின்எண்ணத்தில் தலைவனின்பெருமையைநிலைநாட்டிஇருக்கும்என்பதில்ஐயமில்லை. இதனால்தலைவனின்வீரமிக்கநாட்டையும்அவன்பிறந்தசிறப்புமிக்ககுடும்பத்தையும்தலைவிதலைவன்இடையேநடந்தகளவுவாழ்வினையும்தோழிதிறம்படமொழிகிறாள்.

களவுவாழ்க்கைமேம்பட்டதலைவன்.,இரவுக்குறியில்வந்துஒழுகியபொழுதும்உள்ளப்புணர்ச்சிஅளவில்நின்றுஅளவளாவுதல்இன்றிமெய்தொட்டுஅளவளாவவில்லைஎன்பதனைதோழிசெவிலிக்குவிளக்கமாகஅறிவுறுத்துகின்றாள்.

**'வேய்புரைமென்தோள்இன்துயில்**
**பெறாஅன் ……' (குறிஞ்சிப்பாட்டு;242-243)**

எனக்கூறுவதனால்., இரவுக்குறியினும்மெய்யுறுபுணர்ச்சிநிகழாமையைஅறியலாம். ஆயினும்புணர்ச்சிஅளவில்நிற்கும்காதலிலும்தலைவன்தலைவிஆகியோரிடையேஅன்புதலைதூக்கிநின்றதுஎன்பதைத்தோழிகுறிப்பிடமறக்கவில்லை.

**‘காவலர்கடுகினும், கதநாய்குரைப்பினும்,**

**நீதுயில்எழினும், நிலவுவெளிப்படினும், ’**

**(குறிஞ்சிப்பாட்டு;240-241)**என்னும்அடிகளில்தலைமக்களின்அன்புவேட்கைபலஇடர்கள்இடையிலும்வளர்ந்தோங்கிஉணர்த்துகிறாள்.

அன்பின்உயர்வினைகாட்டும்நோக்கத்திலும்இருவரும்ஒழுக்கத்தில்உயர்ந்தவர்கள்என்றுஉணர்த்தும்நோக்கத்திலும்இருவரின்காதலும்மெய்யுறுபுணர்ச்சிஅற்றதுஎனதோழிகுறிப்பிட்டாள்.இதனால்இருவர்இடையிலும்அன்புஇல்லைஎனச்செவிலிதவறாகக்கருத்துக்கொள்வாளோ.,என்றநோக்கத்தில்அவர்தம்அன்புவேட்கையைமறவாதுகுறிப்பிடுகிறாள்தோழி.

தலைவியின்நலம்காக்கஅவளுக்குக்காவலாகச்செல்வதுதோழியின்பணி.தோழிதன்காவலில்தவறியதால்தான்செவிலியின்வளர்ப்புக்குஇழுக்குநேர்ந்ததுஎனசெவிலிகருதக்கூடும்.இதைஉணர்ந்ததோழிதன்காவலுக்குஇழுக்குநேராவண்ணம்நிகழ்ச்சிகளைஅடுக்கிச்சென்றுமுடிக்கிறாள்.தலைவன்-தலைவிஇடையேநட்புஇயற்கைப்புணர்ச்சியாலேயேஏற்பட்டதுஎன்றுமீண்டும்மீண்டும்வலியுறுத்துகிறாள்.‘விளைந்ததிணையின்கண்வீழும்கிளிகளையோட்டிமாலைப்பொழுதில்வருவீராக’எனச்சொல்லிசெவிலிஅவர்களைதினைப்புனத்திற்குஅனுப்பிவைத்ததைஎடுத்துக்கூறுகிறாள்.தலைவனின்மலைவளத்தைஉள்ளுறைஉவமத்துடன்கூறுங்காலமும்‘தேன்அடையில்இருந்துஒழுகியதேன்’ என்னும்கூற்றால்,,இருவரையும்கூடியதுபால்வரைதெய்வமேஎன்றும்கூறுகிறாள்.மேலும்இருவர்நெஞ்சமும்விரும்பியநிலையில்நேர்ந்தஉள்ளப்புணர்ச்சிக்குமலையில்வாழ்ந்தமதயானைஏதுவாகஇருந்ததை,

‘**அருவிடர்அமைந்தகளிறுதருபுணர்ச்சி:”(குறிஞ்சிப்பாட்டு;212)**என்றவரிகள்நமக்குசொல்லுகிறது.

**தலைவியின்துயரம்;**

தலைவன்தன்மேல்வைத்தகாதலால்இரவுக்குறியில்வந்துஒழுகுவதைஅறிந்ததலைவிஅவன்வரும்வழியில்இடையூறுகளைஎண்ணிக்கலங்கிஅழும்இயல்பினை.,

**‘———————- ———————- கொன்ஊர்**
**மாயவரவின்இயல்புநினைஇத்தேற்றி,**
**நீர்எறிமலரின்சாஅய்இதழ்சோரா,**
**ஈரியகலுழுமிவள்பெருமதர்மழைக்கண்**
**ஆகத்துஅரிப்பனிஉறைப்ப, நாளும்**
**வலைப்படுமஞ்ஞையின்நலம்செலச்சாஅய்**

**நினைத்தொறும்கலுழுமால்இவளே. ———————-“**(குறிஞ்சிப்பாட்டு;245-251) எனச்சொல்லிச்செவிலிக்குஅறத்தொடுநிற்கின்றாள்.

இந்தஇந்தஇறுதிப்பகுதியிலும்தோழிதலைவியின்கவலைஉணர்ச்சியைமுன்னுக்குக்கொண்டுவருவதின்மூலம்செவிலியின்உள்ளத்தில்இரக்கமனப்பான்மையைஏற்படுத்துகிறாள்.

சங்ககாலஇலக்கியத்தைப்பயின்றுஇன்புறும்போதுஒருசிலநேரங்களில்தலைமகன் - தலைமகள்ஆகியோரின்உள்ளத்துஉணர்ச்சிகளுக்குஉருவம்தரும்சிற்பியாகதோழிஉருவாவதைநாம்

உணரவேசெய்கிறோம்.குறிப்பாககுறிஞ்சிப்பாட்டில்பாடல்முழுக்கதோழிதன்அறிவினாலும்சொல்வ ன்மைஆனாலும்மாட்சிமைப்பெறுகின்றாள்.

பயன்பட்டநூல்கள்:


1. பத்துப்பாட்டு--சோமசுந்தரனார்ஊரை
2. பத்துப்பாட்டு -- உ வேசாமிநாதய்யர்உரை
3. சொற்பொழிவுகள்சைவசிந்தாந்தநூற்பதிப்புக்பழகம்
4. சங்கப்புலவர்நூல்வரிசை -புலவர்கா .கோவிந்தன்

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.

வரும் 2020, ஜனவரி மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - டிசம்பர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் ஜனவரி இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com

✉ aranjournal@gmail.com

✆ 72995 87879